செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 446 நாள்: 27/7/17

# செய்தி குறிப்பு

வேலூர் மாவட்டத்தில், தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் 2017-18 ஆம் நிதியாண்டிற்கு செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

மகளிர் நிலம் வாங்கும் திட்டத்திற்கு ஆதிதிராவிட பெண்கள் மட்டும் பயன்பெற முடியும். இதற்கு நிலத்திற்கான மூலபத்திரம், நில விற்பனை உடன்படிக்கை பத்திரம், வில்லங்க சான்று, சர்வே எண், சிட்டா அடங்கல நிலம் விற்பவரது சாதி சான்று போன்ற ஆவணங்களை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்யவேண்டும்.

தொழில் முனைவோர் திட்டம் மற்றும் இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்பு திட்டம் போன்றவற்றிறல் விண்ணப்பதாரர்கள் தாங்கள் விரும்பும் தொழில்களை தேர்ந்தெடுத்து விண்ணப்பிக்க வேண்டும். மொத்த கடன் தொகையில் 30 சதவிகிதம் அல்லது ரு.2,25,000/- எது குறைவோ அது மானியமாக வழங்கப்படும்.

மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு சுழல் நிதிக்கு ரு.25000/- மற்றும் பொருளாதார கடன் திட்டங்களுக்கு 50 சதவிகிதம் அல்லது ரு.2,50,000/- இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படும்.

மேற்கண்ட திட்டங்களில் பயன்பெற வயது வரம்பு 18 மேல் 65 க்குள் இருக்க வேண்டும். அனைத்து திட்டங்களுக்கும் குடும்ப ஆண்டு வருமானம் ரு.1,00,000/- லட்சத்திற்குள் இருக்க வேண்டும்.

மேற்கண்ட திட்டங்களில் பயன் பெற விரும்பும் ஆதிதிராவிடர்கள் http://application.tahdco.com என்ற இணையதள முகவரியிலும், பழங்குடியினர் www.fast.tahdco.com என்ற இணையதள முகவரியிலும் விண்ணப்பத்தினை ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யும் போது விண்ணப்பதாரர் பற்றிற சாதி சான்று, வருமான சான்று, குடும்ப அட்டை அல்லது இருப்பிட சான்று, (பள்ளி மாற்று சான்று, வாக்காளர் அட்டை, ஆதார் அட்டை) இவற்றில் ஏதாவது ஒன்றையும் மற்றும் TIN நெம்பர் உள்ள நிறுவனத்திடமிருந்து பெற்ற விலைப்புள்ளி, திட்ட அறிக்கை மற்றும் புகை படத்தையும் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்து பயன் பெறும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.S.A.ராமன் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர்.

27/7/17

செ.ம.தொ.அ.
வேலூர்- 9.